**டிசம்பர் 18, 2013**

**பொருள்: வங்க தேசத்தினுடனான எல்லை நிலப்பரப்பு உடன்படிக்கைத் தொடர்பான அரசியல் திருத்த வரைவு மசோதா நுற்று பத்தொன்பது 2013க்கான எதிர்ப்பு.**

நான் மாநிலங்களவையின் தலைவருக்கு மேற்குறிப்பிட்டுள்ள **வங்க தேசத்தினுடனான** எல்லை நிலப்பரப்பு உடன்படிக்கை தொடர்பாக அறிமுகப்படுத்தியுள்ள திருத்த மசோதாவை எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளேன். 1973இல் கேசவானந்த் பாரதி விவகாரத்திற்கு பிறகு உருவான அரசியலமைப்பின் அடிப்பைடைக் கோட்பாடு ”இந்தியப் பிராந்தியங்களின் அமைப்புகளை மாற்றி அமைக்க பாராளுமன்றத்திர்கு எந்த அதிகாரமும் இல்லை” என்பதன் அடிப்படையில்தான் நான் இதை எதிர்ப்பதாகத் தெரிவிக்கிறேன். இறையாண்மையும் மற்றும் அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடும் அறிவுறுத்துவது பிராந்தியங்கள் திருத்தி அமைக்கப்படக் கூடாது என்பதுதான்.

இப்போதிருக்கும் சூழ்நிலையோ நேரமோ அல்லது அவையில் ஆட்சியில் இருப்பவர்களை எதிர்த்தோ இந்த எதிர்ப்பை நான் முன்வைக்கவில்லை. மேலும், டிசம்பர் 13, 2013 அன்று மதிப்பிற்குரிய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் அவர்களிடமிருந்து பதில் கடிதம் கிடைத்தது. என் கடிதமும் அவருடைய பதிலும் இதனுடன் இணைப்பட்டுள்ளது.

அமைச்சரின் பதில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளைச் சார்ந்துள்ளது. பிராந்திய விவகாரங்களுடன் தொடர்புள்ள எந்த தீர்ப்பும் அடிப்படை அரசியலைப்பின் கொள்கையான பிராந்தியங்கள் மாற்றியமைக்கப்படக் கூடாது என்பதன் அடிப்படையில் இல்லை.

**(அருண் ஜெய்ட்லி)**